

# விஷ்ணுவின் ஆயிரம்  நாமங்கள்

## முன்னுரை

எத்தனை நாமங்களாலும் இன்னதென்று வரையறுக்க முடியாத அந்த பரம்பொருளை,  நாம் தினமும் பாடும் சஹஸ்ர நாமத்தின் மூலம் தமிழில் தியானிக்க ஒரு முயற்சி.

மகாபாரதத்தில் யுதிஷ்டிரர் பீஷ்மரை பல கேள்விகள்  கேட்கிறார்.
யார் அனைவருக்கும் அடைக்கலம் தரவல்லவர் ?
யார் உலகின் அதிபதி?
யாரை தியானித்தால் மனிதனால்  மனஅமைதியும், வளமான வாழ்வும் பெற இயலும் ?
எல்லா தருமங்களில் உயர்ந்த தருமம் எது?

யாரை எந்த நாமங்களால் எந்த ஒரு உயிரினமும் தியானித்தால் இந்தப் பிறவிக் கடனாகிய சம்சாரக் கடலைக் கடக்க இயலும்? அதற்கு பீஷ்மர் இறக்கும் தருவாயில் அம்புப் படுக்கையில் உரைத்த மொழிகளே இன்று பல வீடுகளில் ஒலிக்கும் விஷ்ணு சஹஸ்ர நாமம் .

பூஜ்ய சுவாமி தயானந்த சரஸ்வதி விஷ்ணு சஹஸ்ரநாமத்தை ஒவ்வொரு பெயராக விரிவாக ஆங்கிலத்தில் உரையாற்றிப் பின்னர் அதை நூலாக வெளியிட்டுள்ளார். அந்த நூலைஆதாரமாக வைத்தே இந்த தமிழாக்கம் பிறந்தது. இதை குருநாதரிடம் அர்ப்பணித்து இங்கு வெளியிடுகிறேன் என்னுள் ஊற்றாய் பெருகும் அந்த இறையே இந்த தமிழாக்கத்தை எழுதியிருக்கிறார் .
எல்லாமே அந்த இறை என்பதால் பிழைகள் ஏதும் இருப்பின் அவரே பொருத்தருள வேண்டுகிறேன்.

போற்றுவார் போற்றல் கண்ணனுக்கே !

**வரத்திருமகள்**

விஷ்ணுவின் ஆயிரம் நாமங்கள்

1.
Vishvam Vishnu Vasatkarah Bhutabhavyabhavatprabhuh
Bhutakrt Bhutabrt Bhavah Bhutatma Bhutabhavanah

அண்டத்தின் வடிவமாய் அகிலத்தை ஆண்டவனே
உண்மையாய் எல்லாவற்றிலும் ஊடுருவி நிற்பவனே
அக்னியின் மூலமாய் அடையும் உருவமே
முக்காலத்திலும் நிறைந்த முழுமுதற்க் கடவுளே
உயிரை உருவாக்குபவனே உயிரை அழிப்பவனே
உயிராய் உலவும் உண்மையான மாயையே
இருக்கும் தன்மையை இருக்க வைப்பவனே
இருக்கும் அனைத்திலும் இருக்கும் ஆன்மாவே
அனைத்தையும் உருவாக்கி அனைத்திலும் இருப்பவனே (9)

2.
Putatma Paramatma Muktanam parama gatih
Avyayah Purushah Saksi Ksetrajnah Aksarah (eva cha)

புனையப் புனைய புனிதம் கெடாதவனே
எல்லைகள் இல்லாது எங்கும் நிறைந்தவனே
எல்லோரும் விரும்பிடும் எழிலான குறிக்கோளே
மாறாத தன்மையை மகத்துவமாய்க் கொண்டவனே
கோராது நெஞ்சினில் குடிகொண்ட புருஷனே
மனமும் புலனும் மாறாத சாட்சியே
மனமும் உடலும் மாயமாய் அறிந்தவனே
மாற்றங்கள் இல்லாத மண்டலம் காப்பவனே (17)

3.
Yogah Yogavidam neta Pradhanapurusesvarah
Narasimhavapuh Sriman Kesavah Purushothamah

ஏற்றமிகு யோகத்தில் எளிதில் கிடைப்பவனே
அறிந்த யோகிகளின் அன்பான தலைவனே
அறியாத மாயையே ஆனந்த ஜீவனே
சிங்கம் பாதியாகி சீறிடும் அவதாரமே
மங்காத செல்வம் மகாலக்ஷ்மி கொண்டவனே
அழகிய கேசத்தை அலையாய்க் கொண்டவனே
பழகிய மானுடத்தில் பரந்த உத்தமனே (24)

4.
Sarvah Sharvah Sivah Stanuh Bhutadih Nidhiravyayah
Sambhavah Bhavanah Bharta Prabhavah Prabhuh Isvarah

எல்லாம் உருவாக ஏற்றமிகு காரணமே
எல்லாம் அடங்கிவிட எழிலான காரணமே
மங்கலம் பொருந்திய மகத்தான ஈசனே
தங்கிடும் நிலையாய் தாரணி காப்பவனே
பூதகணங்களின் மூலமான புவனத்தின் காரணமே
வேதமுதலாய் அழிவில்லா ஆனந்த நிதியே
உருவாய் தன்னிச்சையில் உலவும் மாயையே
கருமத்தின் பலனை கனியாய் அளிப்பவனே
தருமம் அழியாது தாரணி காப்பவனே
கருவுக்குள் அணுவாகி காத்திடும் இயற்கையே
மண்ணில் கொண்ட மகத்தான திறமையே
எண்ணில் அடங்கா ஏற்றமிகு தலைமையே (36)

5.

Svayambhuh Sambhuh Adityah Puskaraksah Mahasvanah
Anadinidhanah Dhata Vidhata Dhatutruttamah

சுயமாய் உருவாகும் சுயம்பு வடிவமே
உயரிய ஆனந்தத்தை உரியவருக்குத் தருபவனே
தங்கநிற கதிராய் தரணியின் ஒளியே
பங்கஜ கண்களைப் பாங்குடன் கொண்டவனே
சிறப்பான ஒலியாகி செந்நெறி வேதமே
இறப்பும் பிறப்பும் இல்லாத ஆண்டவனே
அண்டத்தைக். காக்கும் அழிவில்லா ஆக்கமே
மண்ணில் பலனை மனிதருக் களிப்பவனே
நிலையான பொருளாய் நிற்கும் நிஜமே (45)

6.
Aprameyah Hrsikesah Padmanabhah Amaraprabhuh
Visvakarma Manuh Tvasta Sthavisthah Sthaviro Dhruvah

கலையையும் கல்வியையும் கடந்து நிற்பவனே
புலன்களின் தலைவனாய் புவனம் காப்பவனே
அலங்காரத் தாமரை அங்கத்தில் கொண்டவனே
குலம்காக்கும் தேவர்கள் கும்பிடும் தலைவனே
உலகத்தை உருவாக்கிய ஓங்கார இறையே!
நினைக்கும் ஆற்றலை நேர்த்தியாய் கொண்டவனே
அனைத்தும் உள்ளடக்கி அழிக்கும் ஆண்டவனே
பெருத்த உருவமாய் பிரபஞ்சமாய் நிற்பவனே
மருவில்லா பழமையே மாறாத உண்மையே (54)

7.
Agrahyah Sasvatah Krsnah Lohitaksah Pratardanah
Prabutah Trikakubdhama Pavitram Mangalam Param

உணர்வால் உணரமுடியா உண்மை உருவே
கணங்களில் அழியாத காலத்தின் நிலையே
கருநீல வண்ணத்து களிப்பின் உருவமே
வருடும் செந்நிற வானத்து ஒளியே
உலகை பிரளயத்தில் உள்வாங்கி நிற்பவனே
பலகுணங்கள் படைத்த பகவான் நீயே
உலகங்கள் மூன்றிலும் உள்ளிருக்கும் ஈஸ்வரனே
உலகில்  தூய்மையை உருவாக்கும் ஈச்வரனே
மங்களம் பொருந்திய மகத்தான ரூபனே (63)

8.
IsanahPranadah Pranah Jyesthah Sresthah Prajapatih
Hiranyagarbhah Bhugarbhah Madhavah Madhusudanah

மங்காத புகழுடன் மகாராஜ தலைவனே
உயிரை உருவாக்கி உயிரை அழிப்பவனே
உயிராய் உள்ளுக்குள் உணர்வாய் இருப்பவனே
எல்லோருக்கும் மூத்தவனாய் எதற்கும் காரணமானவனே
எல்லா புகழுக்கும் ஏற்ற பெரியவனே
செய்வினை பலனை சேர்ந்திட தருபவனே
மெய்யான ஞானமே மேன்மை பிரம்மமே
உலகத்தை உள்சுமந்த உண்மை உருவே
சுலபத்தில் தெரியாத சௌபாக்ய பதியே
ஆணவ மதுவை அழிக்கும் அண்ணலே (73)

9.

Isvarah Vikarami Dhanvi Medhavi Vikramah Kramah
Anuttamah duradarsah krtajnah Kriti atmavan

மாணப் பெரிதாய் மண்டலம் நிறைந்தவனே
வீரத்தில் சிறந்த விஷ்ணு ரூபனே
தீரமாய் அம்பினை திறம்பட விடுபவனே
புத்தியாய் நினைவாய் பூத்திடும் அறிவே
மத்தியும் மேல்கீழுமமாய் மாயமாய் அளந்தவனே
வினையின் காரணமாகி வினையாய் இருப்பவனே
தனக்கு நிகரில்லா தயாள உத்தமனே
எதிர்க்க முடியாத எளிமை ஈஸ்வரனே
விதியை நிர்ணயிக்கும் வித்தக ஈஸ்வரனே
செயலின் காரணமாகும் சீரான முயற்சியே
வியத்தகு பூரணமாய் வீற்றிடும் பரமனே (84)

10.
Suresah saranam sarma visvaretah prajabhavah
Ahah samvatsarah vyalah pratyayah sarvadarsanah

தருமத்தைக் காக்கும் தேவர்களின் தலைவனே
கருமத்தைக் கரையேற்றும் களங்கமில்லா சரணமே

உருவத்தில் ஆனந்தம் உளமாரக் கொண்டவனே
கருவாகும் விதையாகி காட்சியாகும் அண்டமே
பிறவிகள் பலவாய் பிறந்திடும் பிரம்மமே
இரவைப் போக்கிடும் ஈஸ்வர ஒளியே
காலமாய் அமைந்த கடவுளின் உருவமே
மூலத்தை பிடிக்க முடியாத முழுமுதலே
நினைவாய் இருக்கும் நிஜமான அறிவே
அனைத்துக்  கண்களும் அழகாய் கொண்டவனே (94)

11.
Ajah sarvesvarah siddhah siddhih sarvadi acyutah
Vrasakapih ameyatma sarvayogavinisrtah

பிறப்பே இல்லாத பிரம்ம ஸ்வரூபமே
பிறந்த உயிருக்கெல்லாம் பெரிய தலைவனே
சாதனை புரிந்த சத்தியஞான ஆனந்தமே
சாதனை ஆகி சாத்திரம் ஆனவனே
என்றும் முதலான எழிலான உண்மையே
என்றும் அகலாத ஏகாந்த ஆனந்தமே
தருமத்தின் உருவே தரணிகாத்த வராகமே
இருப்பதில் அளக்க இயலாத இயல்பே
இணையாத இணையில்லா இயல்பான ஈஸ்வரனே (103)

12.

Vasurvasumanah satyah samatma sammitah samah
Amoghah pundarikakso vrsakarma vrsakrtih

அணையா நெருப்பாய் ஆனந்தமாய் வசிப்பவனே
விருப்பு வெறுப்பில்லா விசால மனமே
உருவாய் அருவாய் உலவும் உண்மையே
விளக்க முடியாத விசித்திர சமமே
அளக்க முடியா ஆனந்த இயல்பே
மாற்றங்கள் இல்லாத மலைப்பான நிஜமே
ஏற்றங்கள் தந்திடும் ஏகாந்த பக்தியே
உள்ளக் கமலத்தில்  ஊடுருவி இருப்பவனே
கள்ளமில்லாது அவன்செய் கருமம் தருமமே
உருவமே தருமமாய் உலகில் கொள்பவனே (113)

13
Rudro bahusira babrur visvayonih sucisravah
Amrtah sasvatasthanur vararaho mahatapah

கருத்தைக்  கலங்கடிக்கும் கண்ணீர் களைபவனே
தலையான தலையாய் தலையாயிரம் கொண்டவனே
மலையாய் தாங்கி மக்களைக் காப்பவனே
கருவறையில் அண்டத்தைக்  கருத்தாய் கொண்டவனே
அருமை நாமங்கள் அழகாய் கொண்டவனே
இறப்பே இல்லாத இளமை ஈஸ்வரனே
அறவே மாறாத அழியாத ஸ்வரூபமே
இறக்கமே இல்லாத ஏற்றமான உண்மையே
சிறந்த ஞானமாய் சீரிய அறிவே (122)

14
Sarvagah Sarvavidbhanuh visvakseno janardanah
Vedo vedavidavyango vadango vedavit kavih

உள்ளும் வெளியுமாய் உலகெங்கும் பரவியவனே
தெள்ளத் தெளிவாய் திசையெங்கும் ஒளிர்பவனே
எத்திசையிலும் படைகள் எழிலாய் சூழ்ந்தவனே
அத்தனை மக்களுக்கும் அளந்து தருபவனே
அறிய வைக்கும் அரிய வேதங்களே
அறிஞனாய் வேதங்கள் அறிந்த ஈஸ்வரனே
குறைகள் இல்லாத குவிந்த ஐஸ்வர்யமே
நிறையான வேதத்தை நித்யமாய் கொண்டவனே
வேதங்கள் புரிந்திட வித்தைகள் செய்பவனே
சாதனையாய் அனைத்தும் சத்தியமாய் காண்பவனே (132)

15
Lokaadhyaksah suradhyaksho dharmadhyaksah krtaakrtah
Chaturatma chaturuvyuha chaturdamstras chaturbujah

உலகத்தின் பிரதிநிதியாய் உணர்வின் அரசனே
பலவித தேவர்களின் பாதுகாப்பு நாயகனே
தர்மத்தை நிலைநாட்ட தயக்கம் இல்லாதவனே
கர்மத்தின் விளைவும் காரணமும் அவனே
நான்கு நிலைகளிலும் நிலையான ஆத்மாவே

நான்கு நிலைகளை நடத்தும் நாயகனே
நான்கு பற்கள் மிளிரும்  நரசிம்மமே
நான்கு கரங்களில் நலம்தரும் நாராயணனே (140)

16
Bhraajishnur bhojanam bhokta sahishnur jagadadijah
anaho vijayo jeta visvayonih punarvasuhu

ஒளிரும் உணர்வான ஓங்கார உண்மையே
களைப்பை நீக்கும் கனிவான உணவே
உணவை சுவைக்கும் உன்னத உணர்வே
இணக்கமாய் சகித்து இயல்பாய் இருப்பவனே
அண்டம் தொடங்கையில் ஆதியாய் ஆனவனே
புண்ணிய பாவங்கள் இல்லாத விஷ்ணுவே
வெற்றிகள் அனைத்தும் பெற்ற நாயகனே
கற்றவித்தை யாவும் கடந்த மாவீரனே
உலகத்தைக்  கருவாய் கொண்ட உத்தமனே
பலஉருவாய்  திரும்பவும் பிறக்கும் பிரம்மனே (150)

17.
Upendro Vamanaha pramshu amoghah suchirur jitah
Athindraha sankraha sargo dhrtatma niyamo yamah

இந்திரன் தம்பியாய் இந்த்ரியங்கள் தலைவனே
வந்திறங்கி விரிந்த  வாமன வடிவமே
விரிந்து எழுந்த விஸ்வரூப விஷ்ணுவே
புரியும் செயல்யாவும் பலனைத் தந்திடுமே
புவனம் அனைத்தையும்  புனிதமாக்கும் புனிதமே
அவனியில் உறுதியை அளித்திடும் பலமே
இந்திரனுக்கு மேலான ஈஸ்வர வடிவமே
அந்தியில் அனைத்தையும் ஆட்கொள்ளும் பிரம்மமே
உருவாக்கி உருவமாகி உணர்வாகும் உன்னதமே
உருவம் மாறாது உள்ளத்து சத்தியமே
நித்தியம் செய்ய வேண்டிய நியமமே
சத்தியம் காக்கும் சாத்திரக்  கட்டுப்பாடே (162)

18.
Vedyo vaidyah sadayogi viraha madhavo madhuh
Atindriyo mahamayo mahotsaho mahabalah

அறியப் படவேண்டிய அரிதான அறிவே
அறிவு யாவும் அறிந்த அறிஞனே
எல்லாம் அடைந்த ஏகாந்த யோகியே
அல்லது செய்பகையை அழிக்கும் வல்லவனே
தெளிவான ஞானத்தின் தெய்வ வடிவமே
களிப்பைத் தந்திடும் கனிவான தேனமுதமே
இந்திரயத்தால் உணரமுடியா ஈஸ்வர சக்தியே
தந்திர மாயங்களை தரணியில் செய்பவனே
உற்சாகம் குன்றாத உன்னத வடிவமே
குற்றமே இல்லாத குன்றாத பலமே (172)

19

Mahabudhir mahaviryo mahasaktir mahadyutih
Anirdhesyavapuh sriman ameyatma mahadridhrk

புத்தியில் சிறந்த பூரண சிருஷ்டியே
சித்திக்கு எட்டாத வீரியம் சக்தியே
சக்தியால் எதையும் சாதிக்கும் ஆக்கமே
சிக்கலை விடுவிக்கும் சிறந்த அறிவே
இன்னதென்று சொல்ல இயலாத இயல்பே
திண்ணமான ஐஸ்வர்யத்தின் திடமான எஜமானே
அளவிட முடியா அறிவைப் பெற்றவனே
குலத்தைக் காத்த கோவர்தன கிரிதாரியே (180)

20
Mahesvaso Mahibarta srinivasa satam gatih
Aniruddhah suranando govindo govidam patih

வில்லினில் அம்பை வித்தகமாய் ஏவுபவனே
சொல்லாது பிரளயத்தில் சொத்தினைக் காப்பவனே
மார்பினில் இலக்ஷ்மியை மகிழ்வாய் கொண்டவனே
பூர்ண பாதையே  பாதையின் முடிவே
தடுக்க முடியாத தடையில்லா சத்தியமே
அடுக்காய் தேவருக்கு ஆனந்தம் தருபவனே
வேதங்களைக் காக்கும் வேத புருஷனே
வேதங்களை அறிந்த வித்தக நாயகனே (188)

21
Maricirdamano hamsah suparno bhujagottamah
Hiranyanabhah suthapah padmanabhah prajapatih

ஒளிக்கு ஒளியாய் ஒளிரும் ஓங்காரமே
அளிக்கும் பயனை அளந்து அளிப்பவனே
சம்சார பயத்தை அறுக்கும் அன்னமே
அம்சமாய் பறக்கும் ஆனந்த மயமானவனே
ஊர்ந்திடும் சேஷனாய் உலகத்தை இயக்குபவனே
கூர்ந்த அறிவாய் ஜொலிக்கும் நாபியே
உருவாக்கும் தவத்தை உன்னதமாய் செய்பவனே
கருவாய் நாபியில் கமலமாய் ஒளிர்பவனே
தந்தையாய் தாயாய் தாரிணி காப்பவனே (197)

22
Amrtyuh sarvadrk simhah sandhata sandhiman sthirah
Ajo durmarsanah sasta visrutatma surariha

விந்தையாய் அழிவில்லா விழிப்பான இனிமையே
எல்லாம் காணும் இயல்பான விழிகளே
சொல்லாமல் பாவங்களை சிம்மமாய் அழிப்பவனே
இணைக்கும் உறவாய் இவ்வுலகின் காரணமே
இணைக்கும் உறவுகளை இனிதாய் அனுபவிப்பவனே
மாற்றங்கள் இல்லாத மலையான திடமே
ஏற்றமாய் இவ்வுலகை இயக்கும் அசைவே
தடுக்க இயலாத தாரணியின் இயக்கமே
அடுக்கடுக்காய் தருமத்தை அறிவூட்டும் தலைவனே
அறியப்படும் சத்திய ஆனந்த சித்தே
தெரிந்து தேவர்களைக் காக்கும் தெய்வமே (208)

23
Guru guruthamo dhama satya satya parakramah
Nimisho animisha sragvi vacaspatirudaradhih

அறியாமை போக்கிடும் அகத்தின் ஆசானே
அறிவின் ஆசானுக்கு ஆசானாய் நிற்பவனே
தானாக ஒளிரும் தன்னிகரில்லா ஒளியே
மாறாத சத்திய மந்திர மறையே

தெரியாத தடைகளை தெளிவாய் அகற்றுபவனே
புரியாது விழிமூடும் பிரளய இரகசியமே
காலத்தால் அளக்க முடியா கண்சிமிட்டலே
ஞாலத்தில் மணக்கும் ஞானமலரின் மணமே
சொல்லின் செல்வனே சொல்லமுடியா அறிவே (217)

24
Agranir gramanih sriman nyayo neta samiranah
Sahasramurdha visvatma sahasraksah sahasrapat

செல்லும் இடத்தை செவ்வனே காட்டுபவனே
எல்லாருக்கும் தலையான ஏற்றமிகு தலைவனே
துல்லிய ஒளியுடன் தூய பிரகாசமே
காரண காரியத்தின் மூலமான காரணமே
பூரண பூமிக்கு பொலிவான தலைவனே
இயங்கும் மூச்சாய் இயக்கும் மேன்மையே
இயங்கும் தலைகள் எண்ணில டங்காதவனே
அண்டத்தின் சாத்தியமான அனுபவ உண்மையே
உறுப்புகள் ஆயிரம் உடலில் கொண்டவரே
உறுப்பின் காரண உள்ளிருக்கும் உணர்வாயிரமே (227)

25
Avartano nivrttatma samvrtah sampramardanah
Ahahsamvartakah vahnir anilo dharanidharah

தொடக்கமும் முடிவுமின்றி தொடரும் சுழற்சியே
தொடரும் பிறவிப்பயன் தொடாத மேன்மையே
மறைக்கும் மாயத்தின் மைய்யமாய் நிற்பவனே
உறைக்கும் உண்மையாய் அழிவை நடத்துபவனே
காலத்தை நிர்ணயிக்கும் கதிராய் ஒளிர்பவனே
ஞாலத்தின் ஒளியாய் அக்னியாய் மின்னுபவனே
காற்றாய் எங்கும் கண்ணுக்குத் தெரியாதவனே
போற்றிடும் பூமியாய் பூலோகம் ஆனவனே (235)

26
Suprasadah prasannatma visvadhrg visvabhug vibhuh
Satkarta satkrtah sadhu jahnur narayano narah

கருணையால் அனைவரையும் காக்கும் நாயகனே

அருமையாய்  நிறைவை ஆனந்தமாய் கொண்டவனே
அண்டத்தின் நாயகனாய் அகிலம் காப்பவனே
அண்டத்தின் அரசனாய் அனைத்தும் நடத்துபவனே
பல்வேறு உருவமாய் பாலிக்கும் மாயனே
சொல்லுக்கும் செயலுக்கும் சிந்தையை ஆனவனே
எல்லோராலும் என்றும் பூஜிக்கப் படுபவனே
எல்லாவற்றையும் நடத்தும் ஏகாந்த நாயகனே
எல்லோரையும் அழிக்கும் இணையில்லா பிரளயமே
எல்லோருக்கும் மூலமாய் இருக்கும் மோட்சமே
எல்லோருக்கும் தலையாய் எழிலாய் நிற்பவனே (246)

27
Asankhyeyo aprameyatma visistah sistakrt sucih
Siddarthah siddhasankalpah siddhidah siddhisadhanah

எண்ணிக்கையில் அடங்கா ஏற்றங்கள் கொண்டவனே
எண்ணத்தில் அடங்கா அளவுகள் உடையவனே
எல்லா நிலையையும் எளிதில் கடப்பவனே
எல்லா சட்டங்களையும் ஏற்றத்துடன் நடத்துபவனே
புனிதம் உடைய பூரண உருவமே
இனிதாய் சித்தியை எப்போதும் அடைந்தவனே
புத்தியின் எண்ணங்களை புவனத்தில் அடைபவனே
சித்தியாய் வெற்றியை சித்திக்க வைப்பவனே
வெற்றிகளை அடைவதற்கு வேராய் விளங்குபவனே (255)

28
Vrsahi vrasabho Vishnuh vrsaparva vrsodarah
Vardhano vardhamanasca viviktah srutisagarah

தருமமாய் தாரணியில் மின்னிடும் ஈசனே
கருமத்தின் விளைவை கருணையில் அளிப்பவனே
உலகத்தில் எங்கும் ஊடுருவி நிற்பவனே
உலகமாய் நிலவிடும் உண்மை உருவமே
அருளை மழையாய் அனுதினம் பொழிபவனே
ஊட்டத்தை அளித்து உலகைக்  காப்பவனே
கூட்டமான உலகில்  குதூகலமாய் வளர்பவனே
தனித்த இவ்வுலகில் தானாய் இருப்பவனே
அனிச்சை நதிகளும் ஆழ்கடலும் ஆனவனே (264)

29.
Subhjo durdharo vagmi mahendro vasudo vasuh
Naikarupo brhadrupah sipivistah prakasanah

திண்ணமான தோளுடன் திரண்ட கரங்களே
எண்ணத்தின் வடிவமே கட்டுப்படா வலிமையே
வேதங்களின் மூலமே வீரிய விவேகமே
ஆதரவு அளித்து அனைவரையும் ஆண்டவரே
செயலைச் செய்திடும் செல்வந்த மூர்த்தியே
நயமாய்ப் பரவிடும் பல்வகை உருவமே
பெருத்த அண்டத்தின் பெரிய காரணமே
மருவில்லா கதிரவனின் மாறாத கதிர்களே
ஊடுருவிப் பாய்ந்திடும் உலகின் ஒளியே (274)

30
Ojastejodyutidharah prakasatma pratapanah
Ruddhah spastaksharo mantras chanramsur bhaskaradyutih

தினமும் உயிராய் ஒளிர்ந்து நிற்பவனே
தனக்குத் தானே தகதகத்து நிற்பவனே
உலகின் அணுக்களில் உள்ளமர்ந்த சக்தியே
வளங்கள் எல்லாம் வசீகரமாய் கொண்டவனே
ஓங்காரச் சொல்லின் உண்மை பொருளே
ரீங்கார வேதமாய் ரம்மியம் சேர்ப்பவனே
சந்திரன் ஒளியாய் சமரசம் செய்பவனே
சுந்தர வடிவான சூரியப் பிரகாசமே (282)

31
Amrtamsudbhavo bhanuh sasabinduh suresvarah
Ausadham jagatah setuh satya dharma parakramah

நிலவாய்ப் பொழியும் நித்ய அமிர்தமே
உலகின் ஒளியாய் உலவும் உண்மையே
நிலவின் ஒளியில் நிறையும் ஊட்டமே
வளமான கொடையாளி வணங்கும் தலைவனே
பிறவிப் பிணியைப் போக்கும் மருந்தே
உறவைச் சேர்க்கும் உலகின் பாலமே
தருமத்தை நிலை நிறுத்தும் பலமே (289)

32
Bhutabhavyabhavanathah pavanah paavana analah
Kamaha kamkrt kantah kamah kamapradah prabhuh

முக்காலத்திலும் உயிரினங்களின் மூலமாய் இருப்பவனே
எக்காலத்திலும் புனிதமாக்க ஏதுவான நாமமே
அனைத்தும் அசைய வீசிடும் காற்றே
அணையா மகிமையுடன் அடங்கா அனலே
ஆசைகளை அழிக்கும் அண்டத்தின் அதிபதியே
ஆசைகளை உருவாக்கும் இச்சா சக்தியே
அழகின் உருவமாய் இழுக்கும் காந்தமே
பழகிய அழகாய் பரிசுத்த காமமே
காமத்தின் பொருளாய் காட்சியாய் ஆனவனே
கோமள அரசனாய் கொலுவிருக்கும் பிரபுவே (299)

33
Yugadikrd yugavarto naikamayo mahasanah
Adrsyo vyaktarupasca sahasra jidanantajit

காலத்தை உருவாக்கும் களங்கமில்லா நாயகனே
காலச் சக்கரத்தை சுழற்றும் நாயகனே
பல்வேறு மாயைகளை பாரினில் நடத்துபவனே
உள்வாங்கி பிரளயத்தில் உட்கொண்டு விடுபவனே
புலனால் அறியமுடியா புரியாத விந்தையே
உலகில் தானாக ஒளிரும் ஜோதியே
வெற்றிகள் ஆயிரம் விளையாட்டாய் சுமந்தவனே
வெற்றிகள் எங்கும் எப்போதும் கொண்டவனே (307)

34
Isto Visistah sistestah sikhandi nahuso vrsah
Krodhaha krodhakrt karta visvabahurmahidharah

விரும்பத் தக்க வியத்தகு விருப்பமே
விருப்பு வெறுப்புக்கு வெளியில் இருப்பவனே
விரும்பும் விவேகிகள் மனதில் தெரிபவனே
விரும்பும் மயிலின் விரிதோகை அணிந்தவனே
இறுக்கும் பந்தங்களை இருக்க வைப்பவனே
அருளை மழையாய் அனுதினம் பொழிபவனே
சினத்தை அழிக்கும் சீரிய குணவானே

சினத்தை உருவாக்கி சிந்திக்க வைப்பவனே
எங்கும் வியாபித்த எழிலான கரங்களே
மங்காத உயிரினம் முழுதும் நிறைந்தவவனே (317)

35
Acyutah prathitah pranah pranado vasavanujah
Apam nidhir adhisthanam apramattah pratisthitah

மாற்றமே இல்லாத மகிமையான ஈஸ்வரனே
ஏற்றமாய் என்றும் எங்கும் இருப்பவனே
பிராண வாயுவாய் பிரபஞ்சத்தில் இருப்பவனே
பிராணத்தை உயிருக்கு பிரதானமாய் வழங்குபவனே
இந்திரன் தம்பியாய் இவ்வுலகத்து வாமனனே
மந்திர மகாநதியாய் வற்றாத ஜீவநதியே
மெய்யான பரம்பொருளாய் மேவி நிற்பவனே
செய்வினை பலனை செவ்வனே தருபவனே
தனக்குத் தானே ஆதாரமாய் இருப்பவனே (326)

36
Skandah skandadharo dhuryo varado vayuvahanah
Vasudevo brahadbhanur adidevah purandarah

வற்றாது ஓடும் வாகான அமிர்தமே
குற்றமின்றி தருமத்தை குறைவின்றி உருவாக்குபவனே
சுமைகளைத் தாங்கும் சுகமான சுமைதூக்கியே
இமைகளைத் திறந்து வரங்களைத் தருபவனே
வாயுவை வீசவைக்கும் வாகான ஈஸ்வரனே
ஆயுட்காலமாய் வசித்து அனைவரிடமும் இருப்பவனே
பளபளக்கும் கதிர்களைப் பாங்காய் கொண்டவனே
அளவில்லா அண்டத்தில் ஆதியாய் ஆனவனே
எதிரிகளை அழிக்கும் ஏகாந்த மன்னனே 335

37
Asokas taranastarah surah saurirjanesvarah
Anukulah satavartah padmi padmanibheksanah

சோகத்தைக் கடந்த சுந்தர வடிவமே
மோகக் கடலை கடக்க உதவுபவனே
பயங்களை போக்கி படகாய் வருபவனே

பயத்தைப் போக்க பலம் தருபவனே
வசுதேவ புத்திரனாய் வையத்தில் வந்தவனே
சிசுக்களை உருவாக்கி சிந்தையில் இருப்பவனே
அனைவருக்கும் தோழனாய் அகிலத்தில் இருப்பவனே
அனைத்து வடிவாய் ஆயிரம்முறை அவதரித்தவனே
அழகிய தாமரையை கரத்தில் கொண்டவனே
அழகிய தாமரை விழிகள் கொண்டவனே 345

38
Padmanabho aravindaksah padmagarbhah sarirabhrt
Maharddhirrddho vrddhatma mahakso garudadhvajah

இதயத் தாமரையில் இனிமையாய் இருப்பவனே
இதமான தாமரை இருவிழிகள் கொண்டவனே
இதயமான கருவில் என்றும் இருப்பவனே
உதவிடும் சத்தினை உடலுக்குத் தருபவனே
அளவில்லா பெருமையை அனுபவமாய் கொண்டவனே
அளக்கமுடியா அண்டமாய் ஆனந்தமாய் விரிந்தவனே
காலத்தால் கணிக்கமுடியா கைவல்ய நாதனே
தேடிடும் பெரியவிழிகளை திவ்யமாய்க் கொண்டவனே
கொடியில் கருடனை கோலமாய்க் கொண்டவனே 354

39
Atulah sarabho bhimah samayajnoh avirharih
Sarvalakshnalaksanyo laksmivan samitinjayah

ஒப்பிட ஒன்றுமே இல்லாத உயர்வே
தப்பாது உள்ளுள் தனியாய் ஒளிர்பவனே
அச்சத்தை உருவாக்கும் அச்சமில்லா தலைவனே
இச்சைகளை நேரத்தில் இனிதாய் அளிப்பவனே
புரியும் தானங்களை பெற்றுக் கொள்பவனே
அறிந்து கொள்ளும் அறிவாய் ஆனவனே
எப்போதும் லக்ஷ்மியுடன் எழுந்து இருப்பவனே
எப்போதும் வெற்றியை எழிலாய் சூடியவனே (362)

40
Viksaro rohito margo heturdamodarah sahah
Mahidaro mahabhago vegavanamitasanah

அழிவே இல்லாத ஆனந்த உருவமே
எழிலான சிவப்பாய் எழுந்து இருப்பவனே
வழியாய் மாறி வகையாய் அருள்பவனே
அழியா பொருளாகி அதன் காரணமானவனே
கட்டுப்பாடான சிந்தைக்கு கட்டுண்டு தெரிபவனே
பொறுமையின் சிகரமாய் பொலிவாய் இருப்பவனே
கருத்துடன் பூமியைக் கண்ணாய் காப்பவனே
பெருமைகள் சுமந்த பிழையில்லா பகவானே
வேகத்தில் சிறந்த வித்தகன் ஆனவனே
தாகத்துடன் அனைத்தும் தன்னுள் உண்பவனே (372)

41
Udbhavah ksobano devah srigarbhaparamesvarah
Karanam kaaranam kartaa vikarta gahano guhah

உருவாக காரணமான உட்பொருளாய் ஆனவனே
உருவாக்க கலந்து உருப்பொருள் தருபவனே
திவ்யமான நினைவாய் தேவனாய் இருப்பவனே
தெய்வமாய் தன்னுள் தேவியை கொண்டவனே
எல்லைகள் இல்லாது எங்குமான ஈசனே
சொல்லமுடியா கருவியாய் சோபித்து இருப்பவனே
எல்லாவற்றிற்கும் காரணமாகி என்றும் இருப்பவனே
எல்லா செயலையும் எழிலாய் செய்பவனே
வியத்தகு உலகை வித்தையாய் உருவாக்குபவனே
சுயமாய் அறிவதற்கு சுலபமாய் இயலாதவனே
அயராது தேடினாலும் அறிவதற்கு கடினமானவனே (383)

42
Vyavasayo vyavasthanah samsthanah sthanado dhruvah
Pararddhih paramaspastastustah pustah subheksanah

உணர்வின் ஆதாரமாய் உருவாகும் அறிவே
உணர்வாகி உயிராகி உருவாகும் காரணமே
காரணமாகி கர்த்தாவாகி காரியமாகும் சத்தியமே
பூரணமாகி தன்மையை பொலிவுடன் தருபவனே
அழிக்க முடியாத மாற்றமில்லா தெளிவே
பழிக்க முடியாத பரந்த பெருமையே
முழுதான பொருளாகிய முதன்மை தெளிவே
வழுவில்லா திருப்தியான வையத்தின் ஆனந்தமே

முழுமைப்  பொருளாய் முன்னின்று நிற்பவனே
எழுச்சியின் இலக்கணமாகி எப்போதும் மங்களமே (393)

43
Ramo viramo virato margo neyo nayo nayah
Virah saktimatam srestho dharmo dharmaviduttamah

எப்போதும் மகிழ்வை அளிக்கும் இராமனே
தப்பாது பிரளயத்தைத்  தன்னுள் கொள்பவனே
இச்சைகள் இல்லாத இயல்பான ஆனந்தமே
மிச்சமே இல்லாத முழுமையான பாதையே
முடிவாய் இருக்கும் மோட்சத்தின் இயல்பே
பிடித்துச் செல்லும் பிடிப்பான தலைவனே
தலைவன் வேறு தேவையில்லா பகவானே
கலையாய் வீரத்தை கைக்குள் கொண்டவனே
சக்திக்குள் தலையான சக்தியாய் ஆனவனே
சக்தியாய் காக்கும் சத்தியமான  தருமமே
தருமம் கற்றவரில் தலையான தலைவனே (404)

44
vaikunthah purusah pranah pranadah pranavah pruthuh
Hiranyagarbhah satrughno vyapto vayuradhosajah

இடையில் வந்திடும் இடையூறுகளைத்  தகர்ப்பவனே
தடையாகும் பாவங்களை தகர்க்கும் புருஷனே
உயிராய் உடலுள் உலவும் உணர்வே
உயிரைத் தருபவனே உள்ளுக்குள் இழுப்பவனே
எல்லோராலும் வணங்கப்படும் எழிலான ஓங்காரமே
எல்லாமாய் விரியப்படும் ஏகாந்த மகிமையே
கருவைப்போல ஒளிரும்  கருத்தின் அறிவே
தருணத்தில் எதிரிகளைத் தகர்க்கும் குருவே
எங்கும் வியாபிக்கும் எளிய காரணமே
பொங்கும் காற்றில் பரவும் சுகந்தமே
உள்நோக்கிட தெரியும் உண்மை ஸ்வரூபமே (415)

45
Rtuh sudarsanah kalah parameshti parigrahah
Ugrah samvatsaro dakso visramo visvadaksinah

பல்வேறு காலங்களாய் பவனி வருபவனே
பல்வேறு புலன்களாய் எளிதில் தெரிபவனே
நொடியாய் காலமாய் நேரமாய் ஆனவனே
முடியாய் அடியாய் முதலாய் உள்ளானவனே
வேண்டுதல்களை செவியெடுத்து வேண்டியவை தருபவனே
வேண்டாது தாக்கிடும் வீரிய உக்கிரமே
எல்லாம் தங்கிட எங்குமாய் ஆனவனே
எல்லாம் தந்திடும் ஏற்றமிகு சக்தியே
எல்லோரும் இளைப்பாற இனிய இருப்பிடமே
எல்லாத் திறமையாய் வெளிப்படும் ஈஸ்வரனே (425)

46
Vistarah sthavarasthanuh pramanam bijamavyayam
Artho anartho mahakoso mahabhogo mahadhanah

விரிவாய்ப் பரவிடும் விஸ்தார உணர்வே
அறிவாய் ஆனந்தமாய் அழியாத திடமே
அறிவாய் அறிஞராய் அறிதலாய் ஆனவனே
தெரியாத விதையாய் உலகின் காரணமே
எல்லோரும் தேடும் இனிய உணர்வே
சொல்ல முடியா முடிவில்லா பூரணமே
அளவில்லா பொருளுடைய ஆனந்த பொக்கிஷமே
அளவில்லா ஆனந்தத்தின் ஆழமான கடலே
அளவில்லா சொத்துடைய அண்டத்தின் தனமே (434

47
Anirvinnah sthavistho bhur dharmayupo mahamakhah
Naksatranemirnaksatri ksamah ksamah samihanah

களைப்பே இல்லாத காருண்ய மூர்த்தியே
விளைவாய் உலகை வீரியமுடன் உருவாக்குபவனே
இருப்பாய் அமையும் ஏகாந்த உண்மையே
தருமத்தின் இயல்பாய் தாரணியில் இருப்பவனே
யாகத்தின் விடையாய் எங்கும் இருப்பவனே
பாகமாய் நடுவில் அசையாத அணுவே
விண்மீன்களின் நாயகனாய் விரியும் அண்டமே
மண்ணில் பொறுமையுடன் மாட்சிமை வாய்ந்தவனே
அண்டத்தின் முடிவில் அணுவாய் உறைபவனே
கண்ணும் கருத்துமாய் காரியம் செய்பவனே (444)

48
Yajnah ijyo mahejyasca kratuh satram satam gatih
Sarvadarsi vimukatma sarvajno jnanamuttamam

செய்யும் செயலை செவ்வனே நடத்துபவனே
செய்யும் செயல்கள் மூலம் வழிபடுபவனே
வழிபடும் தலைவராய் வழிகாட்டும் நிலையே
வழியாகும் வேதத்தின் வளமான மூலமே
சாத்திர வடிவான சத்திய ஆனந்தமே
தோத்திர செய்திட தோன்றிடும் முடிவே
எல்லாம் கண்டிடும் எழிலான விழிகளே
துல்லிய விடுதலைதூய்மையாய்பெற்றவனே
எல்லாம் அறிந்த ஏற்றமிகு ஞானியே
சொல்ல முடியா சொத்தான ஞானமே (454)

49
Suvratah sumukhah suksmah sughosah sukhadah suhrt
Manoharo jitakrodho virabahur vidaranah

அனைவருக்கும் வரங்களை அன்றாடம் தருபவனே
புனையப் புனையப் பொலிவாகும் முகமே
அணுவுக்குள் சூட்சம அணுவாய் ஆனவனே
அருமையான வேதமாய் ஆகம ஒலியே
அதிசய சுகத்தை அளிக்கும் இயல்பே
எதிர்பார்ப்பு இல்லாது இயல்பாய் உதவுபவனே
மனதைக் கொள்ளை கொள்ளும் மாட்சிமையே
மனதின் கோபத்தை அடக்கிய மாண்பே
வீரத்தின் உருவாய் வீற்றிடும் செறிவே
வீரத்துடன் அதர்மத்தை வெற்றியுடன் அழிப்பவனே (464)

50
Svapanah svavaso vyapi naikatma naikakarmakrt
Vatsaro vatsalo vatsi ratnagarbho dhanesvarah

உறங்காமல் அனைவரையும் உறங்க வைப்பவனே
சிறப்பாக தானாக சிந்தையில் இயங்குபவனே
எங்கும் வியாபித்து எதிலும் இருப்பவனே
பொங்கும் பலவடிவில் பூரித்து இருப்பவனே

செய்யும் செயல்களில் செயலாய் இருப்பவனே
மெய்யாய் எல்லாவற்றிலும் மேவிய தலைவனே
மெய்யான அன்புடைய மெத்தன செல்வனே
பொய்மை அகன்றிட புவனம் காப்பவனே
செல்வமாய் இரத்தினங்களில் செழிப்பாய் இருப்பவனே
செல்வந்த மூர்த்தியாய் செருக்குடன் திகழ்பவனே (474)

51
Dharmagub dharmakrddharmi sadasat ksaramaksaram
Avijnata sahasramsurvidhata krtalaksanah

தருமத்தைக் காக்கும் தலைவன் ஆனவனே
தருமத்தை கடைபிடிக்கும் தருமவான் ஆனவனே
தருமத்தை அனுமதிக்கும் தயாள குணவானே
மருவின்றி முக்காலத்திலும் மறையாது நிற்பவனே
உருவாக்கும் மாயையின் உண்மை வடிவமே
உருவாகும் மாற்றங்களின் உள்ளிருக்கும் மாயமே
மாற்றமே இல்லாத மகிமை பொருந்தியவனே
ஏற்றமிகு ஞானத்தின் ஏகாந்த உண்மையே
தோரண மாயிரம் தந்திடும் ஆனந்தமே
காரண வடிவாய் காட்சி ஆனவனே
பூரண பொலிவாய் பூத்திடும் இலட்சணமே (485)

52
Gabhastinemih sattvasthah simho bhutamahesvarah
Adidevo mahadevo deveso devabhrd guruh

கோளத்தின் நடுவில் கொலுவிருக்கும் உண்மையே
ஆளவரும் சத்வமாய் அனைவரின் குணமே
சிம்மமாய் காட்சிதரும் சிங்கார நாயகனே
அம்சமான உண்மையாய் அனைவரிடமும் இருப்பவனே
அனைத்தையும் உள்வாங்கும் அதிசய பிரளயமே
இணையில்லா தெய்வமாய் இனிதாய் தெரிபவனே
தேவர்களின் தேவனாய் தெய்வமாய் ஆனவனே
தேவர்களை காக்கும் தேவாதி தேவனே (493)

53
Uttaro gopatiragopta jnanagamyah puratanah
Sarirabhutabhrd bhokta kapindro bhuridaksinah

உயர்ந்து அனைவரையும் உயரே தூக்குபவனே
இயற்கை பூமியின் இனிய தலைவனே
உலகைக் காக்கும் உத்தம புருஷனே
புலனறியா அறிவின் பொலிவான நாயகனே
பழமை வாய்ந்த பகவான் ஆனவனே
அழகான உடலுக்கு ஆரோக்கியம் தருபவனே
அனுபவிக்கும் உணர்வாய் ஆழமாய் இருப்பவனே
அனுதினம் அலைபாயும் மனதின் தலைவனே
அனைத்து தக்ஷணைக்கும் உரிமை ஆனவனே (502)

54
Sompo ‘mrtapah somah purujit purusattamah
Vinayo jayah satyasandho dasarhah sattvatampatih

யாகத்தில் சோமபானம் யௌவனமாய் அருந்துபவனே
யோகத்தில் அமிர்தம் யோகியாய் அருந்துபவனே
நிலவாய் உலகை நள்ளிரவில் காப்பவனே
உலகில் எதிரிகளை உள்ளும்புறமும் அழிப்பவனே
அனைத்துமாகி நிற்கும் அதிஅற்புத உத்தமனே
அனைத்தும் அறிந்தும் அடக்கம் மிகுந்தவனே
வெற்றியின் இலக்கணமாய் வீற்று இருப்பவனே
பெற்றுவிட பேறுகள்பல பெற்று திகழ்பவனே
சரணாகதி செய்பவருக்கு சத்தியத்தைத் தருபவனே (512)

55
Jivo vinayitasaksi mukundo a mitavikramah
Ambhonidhir anantatma mahoadhisayah antakah

உயிரினத்தின் உயிராய் உள்ளிருக்கும் உண்மையே
உயிரின் சாட்சியாய் உயிரைக் கண்காணிப்பவனே
விடுதலையைத் தந்திடும் வித்தக மன்னனே
அடுக்கடுக்காய் பலங்கள் அதிகமாய் கொண்டவனே
இளமை தேவனாய் எப்போதும் இருப்பவனே
அளவில்லா திறமைகளை அருமையாய் கொண்டவனே
ஆழ்கடலில் சயனித்து அருளிக் காப்பவனே
ஊழ்வினை போக்கிட உள்வாங்கி அடக்குபவனே (520)

56

Ajo maharhah svabhavyo jitamitrah pramodanah
Anando nandano nandah satyadharma trivikramah

காமத்தி கடவுளாய் காட்சி தருபவனே
கோமள ரூபனாய் கும்பிடத்  தக்கவனே
இன்னதென்று சொல்ல இயலாத தன்மையானவனே
இன்னல் தரும் எதிரியை வெல்பவனே
எப்போதும் களிப்பாய் இவ்வுலகில் இருப்பவனே
தப்பாது ஆனந்தம் தன்னுள் கொண்டவனே
மகிழ்வின் கருவாய் மாறாது இருப்பவனே
மகிழ்வை வளமாய் மண்ணில் இருப்பவனே
சான்றாய் தருமத்தை  சத்தியமாய் செய்பவனே
மூன்று உலகை முன்னின்று அளந்தவனே (530)

57

Maharsih kapilacharyah krtajno medinipatih
Tripadastri dasadhyakso mahasringah krtantakrt

கபிலராய் உண்மையை கற்பித்த ஆசானே
சோபிக்கும் உலகை சுகமாய் உருவாக்குபவனே
உலகின் அதிபதியாய் உலவும் ஈஸ்வரனே
உலகை மூன்றடிகளில் உற்சாகமாய் அளந்தவனே
மூன்று நிலைகளின் முதன்மை சாட்சியே
தோன்றும் அவதாரத்தில் துல்லிய மூக்கே
இறப்பை இல்லாது இறக்க வைப்பவனே (537)

58
Mahavaraho govindah susenah kanakangadi
Guhyo gabhiro gahano guptascakragadadharah

வளங்களைத் தந்திட வராகனாய் வந்தவனே
அளக்கமுடியா வேதங்களால் அறியப்படுபவனே
படைகள் பலசூழ்ந்த பகவான் ஆனவனே
தடையின்றி வளையல் தங்கத்தில் அணிந்தவனே
புலன்கள் ஐந்துக்கும் புலப்படாத இரகசியமே
உலகத்தின் கம்பீர உணர்வான உண்மையே
ஊடுருவ முடியாத உண்மை நிலையே
மூடுபனியாய் மறைந்த முழுதான உண்மையே

சக்கர கதையுடன் சங்கடம் தீர்ப்பவனே 546

59
Vedhah svango jitah krsno drdhah sankarsano cyutah
Varuno vaaruno vrksah puskarakso mahatmanah

உலகின் இயக்கத்தை உருவாக்கி இயக்குபவனே
உலகை இயக்க உதவிகள் பெறாதவனே
தோல்விகள் இல்லாது தோன்றும் வெற்றியே
தோல்கறுத்த தோற்றத்து தொன்மை வியாசனே
திடமாய் அசையாது திகழும் திறமையே
படர்ந்து என்றும் பரவும் கவர்ச்சியே
மாலையில் மறையும் மந்தகாச கதிரே
சோலையில் மழையாய் பொழியும் வருணனே
அசையாது வாழும் ஆழமான மரமே
விசையாய் ஊடுருவும் வித்தையான உணர்வே
மனதின் ஆழத்தில் மறைந்த உண்மையே 557

60
Bhagavan bhagaha nandhi vanamali halayaudhah
Adityo jyotiradityah sahisnurgati sattamah

அறுகுணத்தில் திகழும் ஆனந்த பகவானே
தருணத்தில் பாவபுண்யம் தன்னுள் இழுப்பவனே
ஆனந்தம் உடைய ஆன்மாவின் மூர்த்தியே
கானகத்து மலர்களை கழுத்தில் அணிபவனே
உழைக்கும் கரங்களின் ஊக்கமான கோடாரியே
அழைக்காமல் வந்து அணைக்கும் வாமனனே
ஒளியாய் பரவும் ஓங்கார கதிரவனே
களிப்புடன் அனைத்தையும் சகிக்கும் தலைவனே
வழியாய் அமைந்து முடிவாய் ஆனவனே 566

61
Sudhanva khandaparasurdaruno dravinapradah
Divahspark sarvadrguyaso vacaspatirayonijah

அம்பாக அருளாக அவதார கோதண்டமே
இம்மையில் தண்டிக்க இவ்வுலகின் பரசுவே
அச்சத்தை உருவாக்கி அதர்மத்தை அழிப்பவனே

இச்சைகளை அளிக்கும் இனிய செல்வனே
தேவருலகைத்  தொட்டிடும் திவ்ய உருவமே
வேதங்களை அருளிய வியாச அறிஞனே
அறிஞருக்கு அறிஞராய் பிறப்பில்லா யோகியே 573

62
Trisama samagah sama nirvanam bhesajam bhisak
Sanyasakrcchamah santo nistha santih parayanam

மூன்று சாமங்களால் முதன்மையாய்  துதிக்கப்படுபவனே
சான்றான சாமவேதத்தை சத்தியமாய் ஓதுபவரே
தோன்றிய வேதமாய் திவ்யமாய் இருப்பவரே
வேண்டும் மோட்சமாகி விடுதலை தருபவரே
மருந்தாகி நோயகற்றும் மகத்தான அருளே
மருத்துவராகி காத்திடும் மகத்துவ ஈசனே
துறவறம் அளித்திடும் தூய அருளே
அறநெறியில் மனதை அடக்கும் சக்தியே
வேறுபாடு இல்லாத விரிந்த அமைதியே
மாறுபாடு கொள்ளாது மலரும் திடமே
சாந்தமாய் அமைந்த சத்திய அமைதியே
பாந்தமாய் நிறையும் பரவச  முடிவே 585

63
Subhangah santidah srasta kumudah kuvalesayah
Gohito gopatirgopta vrsabhakso vrsapriyah

எழிலின்  உருவாய் எல்லையில்லா அழகே
அழியா அமைதியை அருளும் ஆனந்தமே
தொடரும் உலகை தொடங்கிய ஆதியே
படரும் இயற்கையின் பரவசமாய் அனுபவிப்பவனே
அகன்ற கடலில் ஆனந்த சயனமே
சுகந்த பூமியையும் பசுவையும் காப்பவனே
நிலைத்த பசுபூமியை நித்தம் காப்பவனே
அலையாது காக்கும் மறைந்த மாயையே
தருமத்தைக் கண்ணாய் தரணியில் கொண்டவனே
தருமத்தை நேசிக்கும் தயாள மன்னனே (595)

64
Anivarti nivrattatma samksepta ksemakrcchivah

Srivatsavaksah srivasah sripatih srimatam varah

மாறாத அன்பை மண்ணில் கொண்டவனே
தீராத பற்றை கொள்ளாத தீரனே
சுருக்கி விரியும் சுகந்த உருவமே
அருமையாய் காக்கும் ஆனந்த ஸ்வரூபமே
உள்ளிருக்கும் ஆணவத்தை உருக்கிடும் சிவமே
அள்ளிடும் அழகாய் ஸ்ரீவத்சம் கொண்டவனே
இலட்சுமி வசிக்கும் இலட்சண புருஷனே
இலட்சுமி அதிபதியாய் இவ்வுலகைக் காப்பவனே
செல்வந்தர் இடையில் செல்வமாய் இருப்பவனே (604)

65
Sridah Srisah Srinivasah srinidhih srivibhavanah
Sridharah srikarah sreyah sriman lokatrayasryah

செல்வத்தை அளிக்கும் செல்வந்த மூர்த்தியே
செல்வமான இலக்குமியின் சீமானான மூர்த்தியே
செல்வமிருக்கும் இடத்தில் வசிக்கும் மூர்த்தியே
செல்வத்தின் இருப்பிடமான செழிப்பான நிதியே
பல்வகை செல்வங்களை பாரினில் அளிப்பவனே
இல்லாளாய் இலக்குமியை மார்பினில் அணிந்தவனே
உள்ளுக்குள் அமைதியெனும் செல்வத்தைத் தருபவனே
அள்ளியே மோட்சமெனும் அருளைத் தருபவனே
அள்ளஅள்ள குறையாத ஐச்வர்யம் உடையவனே
கள்ளமில்லாது மூவுலகிற்கும் காரணம் ஆனவனே (614)

66
Svaksah svangah satanando nandirjyotirganesvarah
Vijitatma vidheyatma satkirtischinnasamsayah

எழிலான விழிகளுடன் எழுந்தருளும் விஷ்ணுவே
எழிலான கரங்களுடன் எமக்கருளும் விஷ்ணுவே
எப்போதும் ஆனந்தமாய் எங்கும் இருப்பவனே
அப்போதும் இப்போதும் ஆனந்த ஸ்வரூபமே
புலன்கள் மூலம் பொலிவாகும் ஒளியே
புலன்களின் அரசனாய் புவனம் காப்பவனே
கட்டளைக்கு அப்பாற்பட்டு காத்திடும் மன்னனே
மட்டில்லா புகழுடைய மகத்தான மன்னனே

சந்தேகம் இல்லாத சமத்துவ மன்னனே (623)

67
Udirna sarvatascaksuranisah sasvatasthirah
Bhusayo bhusano bhutih visokah sokanasanah

உயர்ந்தவ ற்றிலெல்லாம் உயர்ந்து நிற்ப்பவனே
அயராது எங்கும் அலர்விழி வைத்தவனே
தனக்கு மீறிய தலைவன் இல்லாதவனே
கணக்கு இல்லாது காலத்தை கடந்தவனே
கடலையும் மண்ணையும் மெத்தையாய் கொண்டவனே
உடலில் ஆபரங்கள் உல்லாசமாய் அணிந்தவனே
மிளிரும் தன்மையுடன் மேன்மை வாய்ந்தவனே
சோகங்கள் இல்லாது சுகமாய் இருப்பவனே
சோகங்களை அழிக்கும் சுபமான விஷ்ணுவே (632)

68
Arcisman arcitah kumbho visuddhatma visodhanah
Aniruddho apratirathah pradyumno amitavikramah

ஒளிரும் ஒளியாய் உள்ளுக்குள் ஒளிர்பவனே
மிளிரும் உணர்வாய் மெத்தமாய் வழிபடுபவனே
அனைத்தையும் தன்னுள் அடக்கி நிற்பவனே
வினைகள் கடந்த வித்தக ஆன்மாவே
இடையூறு அகற்றி புனிதம் அளிப்பவனே
தடைகள் இல்லாது தரணியைக் காப்பவனே
பகைவர் இல்லாத பகவானாய் இருப்பவனே
மிகையாய் செல்வம் மெத்தன பெற்றவனே
திறமைகள் ஏராளம் திடமாய் கொண்டவனே (641)

69

Kalaneminiha virah saurih surajanesvarah
Trilokatma trilokesah kesavah kesiha harih

காலத்தின் இயக்கத்தை கைக்குள் அடக்குபவனே
ஞாலத்தில் வீரத்தை ஞானத்துடன் இயக்குபவனே
சுரா குலத்தின் சுந்தர மகனே
சுரா குலத்தின் இராஜாதி இராஜனே
மூன்று உலகமாய் முன்னின்று இருப்பவனே

மூன்று உலகங்களின் முத்தான வேந்தனே
கதிர்களாய் உலகில் களங்கமின்றி வீசுபவனே
சதிராடி  கேசிகனை சரித்திரத்தில் கொன்றவனே
பிறவியின் வினைகளை பெருமையுடன் போக்குபவனே (650)

70
Kamadevah kamapalah kami kantah krtagmah
Anirdesyavapur visnurviro nanto dhananjayah

ஆசையையின் உருவாய் அனைத்தும் ஆனவனே ஆசையின்  பயனைக் அருளும் ஆண்டவனே
சாந்தமான ஆனந்தம் சத்தியமாய் கொண்டவனே
காந்தமாய் எல்லோரையும் கவர்ந்து நிற்பவனே
வேதங்களை உருவாக்கிய விஷ்ணுவே ஈஸ்வரனே
ஆதாரமாகி அனைத்துமாகி  ஆதியாகும் மூலவனே
ஆகமமாகி எங்கும் வியாபித்த விஷ்ணுவே
வேகமாக இயங்கும்  வித்தக ரங்கனே
எல்லைகள் இல்லாது எல்லாவற்றிலும் இருப்பவனே
செல்வங்கள் அனைத்தும் செவ்வனே கொண்டவனே (660)

71
Brahmanyo brahmakrd brahma brahma brahmavivardhanah
Brahmavid brahmano brahmi brahmajno brahmanapriyah

அறியப்படும் அறிவாகி அரிதான பிரம்மமே
அறிவான வேதங்களுக்கு ஆதரமான பிரம்மமே
உலகின் படைப்பை உருவாக்கும் பிரம்மமே
உலகியல் அனைத்திலும் உண்மையான பிரம்மமே
வேதனைகள் தீர்க்கும் வேதம்வளர் பிரம்மமே
வேதங்கள் அறிந்த வித்தக பிரம்மமே
வேதங்களை கற்று கற்பிக்கும் பிரம்மமே
பிரம்மத்தை உடையவனாய் பிரம்மமாய் ஆனவனே
பிரம்மத்தை உணர்ந்த பிரதான உண்மையே
வேதங்களைக் காப்பவரை விரும்பும் பிரம்மமே (670)

72
Mahakramo mahakarma mahateja mahoragah
Mahakraturmahayajva mahayajno mahahavih

பெரிய பாதங்களுடன் பாரினை அளப்பவனே
பெரிய செயல்களை பெருமையுடன் செய்பவனே
மகத்தான ஒளியுடன் மண்டலம் நிறைந்தவனே
மகத்தான ஊர்வன மாண்புமிகு நாகமே
யாகங்களில் செய்யப்படும் எல்லாவித தியாகங்களே
யாகங்கள் செய்யும் ஆகம பண்டிதனே
யாகமாய் இருந்தபடி உலகம் காப்பவனே
பெற்றிடும் பிரம்மனாய் பிரபஞ்சத்து உண்மையே (678)

73
Stavyah stavapriyah stotram stutih stota ranapriyah
Purnah purayita punyah punayakirtiranamayah

புகழும் தன்மை பூரிப்புடன் பெற்றவனே
புகழும் செயலை பெரிதும் விரும்புபவனே
புகழும் புகழ்ச்சியாக புவனத்தில் இருப்பவனே
புகழ்ச்சி என்னும் செயலாய் இருப்பவனே
புகழ்ச்சி என்னும் செயலை செய்பவனே
மகத்துவமாய் சண்டையிட மகிழ்வாய் வருபவனே
பூரணமாய் இவ்வுலகில் பொலிவுடன் இருப்பவனே
பூரண உணர்வை புவனத்தில் தருபவனே
புண்ணியத்தின் உருவாய் பூத்திடும் அன்பனே
புண்ணியத்தின் பெருமை மிகவும் பெரியதே
எப்போதும் சீராய் இயங்கும் ஆரோக்யமே (689)

74
Manojavastirthakaro vasureta vasupradah
Vasuprado vasudevo vasurvasumana havih

அங்கும் இங்கும் அலைபாயும் மனமே
எங்கும் வேதமாய் இயங்கும் ஆசிரியனே
விதையும் தானாகி விரியும் அதிசயமே
எதையும் செல்வமாய் ஈன்றிடும் வள்ளலே
செல்வத்துள் செல்வமாய் சிந்தையில் நின்றவனே
அல்லல் நீக்கிட அவதார வாசுதேவனே
எங்கும் எதிலும் எப்போதும் வசிப்பவனே
எங்கும் வசிக்க இச்சை கொண்டவனே
யாகத்தின் ஹவிஸாக இவ்வுலகில் இருப்பவனே (698)

75

Sadgatih satkrith satta sadbhutih satparayanah
Suraseno yadusresthah sannivasah suyamunah

நல்லவர் உள்ளத்து நல்லதோர் குறிக்கோளே
நல்ல செயல்களாய் நாள்தோறும் இருப்பவனே
இருப்பதாய் இருக்கும் இனிதான சத்தியமே
இருக்கும் உணர்வாய் இவ்வுலகின் உண்மையே
நல்லவர் அடைந்திடும் நலமான முக்தியே
நல்வீரர்கள் பலரை நயமாய்க் கொண்டவனே
யாதவ குலத்தின் யௌவன குமாரனே
வேதங்கள் காட்டும் வித்தக அடைக்கலமே
யமுனைக்  கரையில் யாவரும் சூழ்ந்தவனே (707)

76
Bhutavaso vasudevah sarvasunilayo nalah
Darpaha darpado drpto durdharoth aprajitah

பௌதிக பொருள்கள் தாண்டிய பகவானே
ஆதியாய் அந்தமாய் அண்டம் காட்டியவனே
உள்ளுக்குள் இழுக்கும் உயிர்க்காற்றாய் இருப்பவனே
எல்லையில்லாது எங்கும் வியாபித்த ஈஸ்வரனே
அகத்தின் கர்வத்தை அழிக்கும் நாயகனே
அகத்தில் கர்வத்தை அளிக்கும் தருமமே
ஆனந்த உருவமாய் ஆனந்தம் அளிப்பவனே
ஆனந்த மூர்த்தியாய் அடையக்  கடினமானவனே
எவராலும் வெல்லமுடியா ஏற்றம் மிகுந்தவனே (716)

77
Visvamurtir mahamurtir diptamurtir amurtiman
Anekamurti avyaktah  satamurtih  satananah

காணும் இவ்வுலகபல  காட்சியாகும் மூர்த்தியே
காணும் உருவங்களில் கடிமகா மூர்த்தியே

உருவத்தில் ஒளிந்த உணர்வான மூர்த்தியே
உருவமில்லா அருவமாய் உள்ளத்து மூர்த்தியே
உருவங்கள் பலவாய் உருவெடுக்கும் மூர்த்தியே
உருவெடுக்காத விதையாய் உறையும் மூர்த்தியே

ஆயிரம் வடிவங்களில் அழகான மூர்த்தியே
ஆயிரம் முகங்காளாய் ஆனந்த மூர்த்தியே (724)

78
Eko naikah savah kah kim yattat padamanuttamam
Lokabandhur lokanathah madhavah bhaktavatsalah

ஒன்றாய் இருக்கும் உண்மை வடிவமே
ஒன்றாகவும் பலவாகவும்இல்லாத மாயமே
சோமரசம் பெற்றிடும் சடங்காகும் செயலே
ஆனந்த வடிவான அமைதியான சத்தியமே
எதுவென்று கேள்வியை எழுப்பிடும் அறிவே
இதுவென்று புரிந்திடும் இலட்ஷணமில்லா பிரம்மமே
அதுவாய் அழியாது ஆனந்தமாய் இருப்பவனே
முழுதாய் தெரியும் முடிவான உத்தமமே
உலகின் நலத்தை உளமார விரும்பவனே
உலகத்தின் அதிபதியாய் உலவிடும் உண்மையே
மதுவின் வம்சத்து மகிழ்வான கண்ணனே
மதுவாய் பக்தரை மயக்கும் மன்னனே (736)

79
Suvarnavarno hemango varangascandanangadi
Viraha visamah sunyo ghrtasiracalascalah

பொன்னிற மேனியில் புவனத்தை ஒளிர்விப்பவனே
பொன்னிற அங்கங்களுடன் பூரிப்பான மாயையே
எழிலான கால்களுடன் எங்கும் இருப்பவனே
அழியா சந்தனக்காப்பு அணிந்த மன்னனே
எதிர்க்கும் பகைவரே எளிதில் வெல்பவனே
எதிரில் இணையில்லா ஏகாந்த மன்னனே
குணங்கள் ஏதுமில்லா குறையில்லா கோவிந்தனே
அணங்குகள் ஆசைகள் இல்லாத அன்பனே
அசைவே இல்லாத ஆனந்த உருவமே
அசையும் பொருள் யாவும் ஆனவனே (746)

80
Amani manado manyo lokaswami trilokadhrik
Sumedha medhajo dhanyah satyamedha dharadharah

தற்பெருமை இல்லாத தயாள ரூபனே
தற்பெருமை தந்திடும் தலைவன் அவனே
பூஜிக்க தகுந்த பெருமை வாய்ந்தவனே
பூஜிக்க உலகத்தின் பெரிய கடவுளே
மூன்று உலகங்களிற்கும் முதன்மை தலைவனே
சான்றான சாத்திரங்கள் பலகற்ற புத்திமானே
யாகத்தின் பலனாய் அவதரித்த மூர்த்தியே
ஆகம விதிகள்படி அனைத்தும் பெற்றவனே
எப்போதும் தோற்காத எழிலான அறிவே
தப்பாது காத்து தரணியைப் பேணுபவனே (756)

81
Tejovrso dyutidharah sarvasastrabhrtam varah
Pragraho nigraho vyagro naikasrngo gadagrajah

மழையைப் பொழியும் மகத்துவ இயற்கையே
பிழையின்றி மிளிரும் பிரகாச ஒளியே
தாங்கிய ஆயுதங்களால் தரணியைக் காப்பவரே
ஓங்கிய அருளால் உள்ளுணர்வை அடக்குபவரே
கட்டுக்குள் அடக்கும் கட்டுப்பாடான அரசனே
தட்டுப்பாடு முடிவில்லா தானியங்கி இயந்திரமே
சீலமாய் நால்வேதங்களைச் சீராய் கொண்டவனே
மூலமாய் முதலாய் முன்னின்று பிறந்தவனே (763)

82
Caturmurts caturbahus caturvyuhas caturgatih
Caturatma caturbahavas caturveda videkapat

நால்வித தன்மைகளாய் நலங்களைத் தருபவனே
நாற்கரங்கள் மூலம் நமக்கருளும் நாயகனே
நால்வித முறைகளில் உலகை இயக்குபவனே
நால்வித ஆசிரம தருமங்களால் அடையப்படுபவனே
நால்வித தன்மைகளாய் நமக்குள் இருப்பவனே
நால்வித அர்த்தங்களாய் வாழ்வில் தெரிபவனே
நால்வகை வேதங்களையும் நலமாய் அறிந்தவனே
கால்பகுதி மட்டுமே கண்ணுக்குத் தெரிபவனே (772)

83
Samavarto nivrttatma durjayo duratikramah

Durlabho durgamo durgo duravaso durariha

உலகை உருவாக்கி உள்ளுக்குள் அணைப்பவனே
உலகில் எங்கும் எப்போதும் இருப்பவனே
எதிர்க்க முடியாது  எப்போதும் வென்றவனே
அதிசயமாய் அனைத்தையும்  அண்டத்தில் இயக்குபவனே
சுலபத்தில் அடைய முடியாத சுகந்தனே
அளந்து அறிவதற்கு கடினமாய் ஆனவனே
நெருங்கிவிட கடினமாய் நேயமாய் இருப்பவனே
கருத்திலே நிறுத்திவிட கடினமாய் திகழ்பவனே
எதிரிகளை அழித்திட எப்போதும் முன்வருபவனே (781)

84
Subhango Lokasarangah sutantus tantuvardhannah
Indrakarma mahakarma krtakarma krtagamah

அழகான கரங்களும் கால்களும் கொண்டவனே
பழகிடும் உலகத்தின் சாரமான பிரபுவே
இழையாய் பின்னிய இவ்வுலகின் பிரதானமே
இழைகளை இணைத்தும் அறுத்தும் நெய்பவனே
உலகை ஆண்டிடும் ஓங்கிய அரசனே
பலன்களில் மகத்துவமான பகவான் ஆனவனே
செய்யவேண்டிய செயல்களை செவ்வனே செய்தவனே
ஐயங்களை அகற்றிடும் வேதங்களை இயற்றியவனே (789)

85
Udbhavah sundarah sundo ratnanabhah sulocanah
Arko vajasanah srngi jayantah sarvavijjayi

முதலான பிறப்பின் மூலமாய் இருப்பவனே
இதமான அழகுடைய இவ்வுலக நாயகனே
உள்ளத்தைக்  குழைய வைக்கும் உத்தமனே
அள்ளிடும் அழகுடைய ஆனந்த ரூபனே
எழிலான இருவிழிகள் இனிமையாய்க் கொண்டவனே
வழிபடும் தன்மை வளமாய்க் கொண்டவனே
உணவை உலகுக்கு அளிக்கும் தனவானே
அலகாய் மூக்கு அளவாய் உடையவனே
வெற்றியின் காரணமான வித்தக மன்னனே
வெற்றிகள் அனைத்தும் வீரியமாய் பெற்றவனே (799)

86
Suvarnabindur aksobhyah sarvangisvaresvarah
Mahahrado mahagarto mahabhuto mahanidhih

பொன்னிற அங்கங்களுடன் பூரிக்கும் மன்னனே
எந்நேரமும் எதனாலும் பாதிக்கப் படாதவனே
பேசும் மொழியின் பெரிய தலைவனே
வீசும் தென்றலில் விரிந்த ஏரியே
ஆழமான சம்சார மாயையானகடலே
பூதங்கள் ஐந்தாய் புவனம் விரிந்தவனே
நிதிகள் அனைத்துமாய் நிறைந்த அரசனே (806)

87
Kumudah kundarah kundah parjanyah pavanonilah
Amrtaso mrtavapuh sarvajnah sarvatomukhah

புவனத்தை மகிழ்விக்கும் புனிதமான ஈஸ்வரனே
அவனியில் குந்தமலரை அழகாய் பூக்கவைப்பவனே
எழிலான மலராய் பூத்திடும் குந்தமலரே
பொழியும் மழையை பெய்யவைக்கும் மேகங்களே
எல்லோரையும் புனிதமாக்கும் எழிலான நாமங்களே
எக்காலத்திலும்  கட்டாயப் படுத்த முடியாதவனே
எப்போதும் அழியாது என்றும் நிலையானவனே
இப்போதும் அப்போதும் என்றுமழியா உருவமே
எல்லாம் அறிந்த ஏகாந்த அறிவே
எல்லா இடத்திலும் நிறைந்த முகமே (816)

88
Sulabhah suvratah siddhah saturjicchaturutapanah
Nyagradhodumbaro svatthascanurandhranisudhanah

எளிதில் பக்தனின் எதிரில் வருபவனே
அளிக்கும் பிரசாதம் அனைத்தும் ஏற்பவனே
சித்திகள் அனைத்தும் சிறப்பாக பெற்றவனே
அத்தனை எதிரிகளையும் அழகாய் வெல்பவனே
எதிரிகளை வேரோடு  எளிதில் அழிப்பவனே
எல்லாவற்றிலும் பெரிதான ஏகாந்த உருவமே
இல்லா இடமில்லா எங்கும்நிறை அம்பரமே

நிலையில்லா சம்சாரத்தில் நிலையான ஈஸ்வரனே
அலைந்த சாணூரனை அழித்த கண்ணனே (825)

89
Sahasrarchi saptajihvah saptaidhah saptavahanah
Amurtiranagaho cintyo bhayakrd bhayanasanah

எண்ணில டங்காத ஏற்றங்களை உடையவனே
கண்ணுக்கு ஏழுவித நாக்குடைய அக்னியே
எழுவகை நெருப்பாகி எழிலான காட்சியே
எழுவகை குதிரைகள் ஏற்றமாய் கொண்டவனே
உருவங்கள் இல்லாத ஓங்கார உண்மையே
அருவமாகி புண்ணிய பாவங்கள் இல்லாதவனே
எண்ண முடியாத இயற்கையான மகத்துவமே
அச்சத்தை உருவாக்கி அகிலத்தை ஆள்பவனே
அச்சத்தை முறித்து அன்பை பொழிபவனே (834)

**90**
Anurbrhatkrsah Sthulo gunabhrnnirguno mahan
Adhrtah svadhrtah svasyah pragvamsozo vamsavardhanah

அணுக்குள் அணுவாய் நுண்ணிய ஆன்மாவே
அண்டத்தை அளக்கும் விரிந்த உருவமே
மெல்லிய உருவமாய் மேவிய அழகே
துல்லிய தேகத்தின் ஸ்தூல வடிவமே
குணங்களின் தன்மைக்கு குறையில்லா மூலமே
குணங்கள் ஏதுமில்லா குன்றாத பெருமையே
தாங்கியே உலகின் தாண்டவ பெருமையே
தாங்கிட ஏதும் தேவையில்லா வலிமையே
தானாக நிற்கும் தன்வலிமை கொண்டவனே
ஞானத்தால் பேரழகு பொலிந்த முகமே
உலகம் தோன்றுவதற்கு முன்னரான வம்சமே
உலகத்தை தொடரவைக்க வம்சத்தை வளர்ப்பவனே (846)

**91**
bharabhrt kathito yogi yogisah sarvakamadah
Asramah sramanah ksamah suparno vayuvahanah

உலகின் பாரங்களை உளமார சுமப்பவனே

உலகில் பலகதைகளில் உருக்கமாக சொல்லப்படுபவனே
யோகத்தால் அறியப்படும் யோகமான ஞானமே
யோகத்தின் தலைவனாய் யோகிகளுக்கு அருள்பவனே
எல்லா விருப்பங்களையும் எளிதில் நிறைவேற்றுபவனே
எல்லா சிரமங்களையும் அழிக்கும் ஆசிரமமே
தருமத்தை மறந்தவருக்குத் தடைகள் தருபவனே
கருமத்தின் பயனாய் சிருஷ்டியை உருவாக்குபவனே
வேதங்கள் மலர்களாக விருட் சமாய் நிற்பவனே
சாதனமாய் வாயுவிற்கு வாகனமாகும் சத்தியமே (856)

**92**

Dhanurdharo dhanurvedo dando damayita damah
Apararjitah sarvasaho niyanta niyamo yamah

தனுசைக் கொண்ட தயாள இராமனே
தனுர் கலையை நன்கறிந்த தலைவனே
தண்டனை வடிவமாய் தருமம் காப்பவனே
தண்டனை தந்திடும் தருமத்தின் நீதிபதியே
அதரும குணத்தை அண்டவிடா தன்மையே
அதருமத்தால் எப்போதும் வெல்ல இயலாதவனே
எல்லா காரியமும் எப்போதும் செய்பவனே
எல்லா காரியத்தையும் நிர்வகிக்கும் தலைவனே
எந்த கட்டளையும் இல்லாத இறைவனே
எந்த காலத்திலும் இறக்காத கடவுளே (866)

93

Sattvavan sattvikah satyah satyadharmaparayanah
Abhiprayah priyarho’rhah priyakrt pritivardhanah

வீரம் பொருந்திய வித்தக சாத்விகனே
தீரத்துடன் சாத்வீக தன்மை உடையவனே
சத்திய குணவானுக்கு சத்தியமாய் இருப்பவனே
நித்தியமாய் தருமத்தை நிறைவாய் புரிபவனே
வேண்டுதல் செய்திட விருப்பங்கள் நிறைவேற்றுபவனே
வேண்டும் என்று விரும்பத் தக்கவனே
வழிபட தக்கதாய் வளங்கள் கொண்டவனே
வழியவழிய அன்பை வாரிவாரி வழங்குபவனே
அழியாது அன்பை அமுதசுரபியாய் அளிப்பவனே (875)

94
Vihayasagatir jyotih surucirhutabhug vibhuh
Ravirvirocanah suryah savita ravilocanah

அங்கும் இங்குமென ஆகாயத்தில் பரவுபவனே
தங்கமாய் பிரகாசம் தன்னுள் கொண்டவனே
அருளைப் பொழிவதை ஆசையாய்க் கொண்டவனே
தருவது அனைத்தையும் தானாக பெறுபவனே
எங்கும் பரவி எல்லாவற்றிலும் ஊடுருவியவனே
எங்கும் விரிந்த ஏகாந்த கதிரவனே
பொங்கும் ஒளியுடன் பூரிக்கும் விண்மீன்களே
மங்காத ஒளியில் மண்டலம் உருவாக்குபவனே
எல்லாம் உருவாக எழிலான காரணமே
அள்ளும் கதிர்களை விழிகளாய்க் கொண்டவனே (885)

95
Ananto hutabhug bhokta sukhado naikajo grajah
Anirvinnah sadamarsi lokadhisthanamadbhutah

எல்லைகள் இல்லாத ஈஸ்வர ஸ்வரூபமே
எல்லா தானங்களையும் பெற்றிடும் தலைவனே
எல்லா அனுபவங்களையும் எழிலாய் செய்பவனே
எல்லா சுகங்களையும் தந்திடும் முடிவெடுப்பவனே
பிறப்புகள் பலவாய் பிறந்து வாழ்பவனே
பிறப்புகளில் முதலான பெருமை வாய்ந்தவனே
விருப்பும் வெறுப்பும் நீங்காது இருப்பவனே
சிறப்புடன் பக்தர்களை சிறக்க வைப்பவனே
உலகத்தின் மூலமாய் ஊடுருவி திகழ்பவனே
உலகின் அற்புதமாய் உண்மையாய் இருப்பவனே (895)

96
Sanatsanatanatmah kapilah kapiravyayah
Svastidah svastikrtsvasti svastibhuk svastidaksinah

காலமென்னும் மாயையில் கலக்கமற நிறைந்தவனே
காலமென்னும் மாயையாய் காட்சி தருபவனே
நீருக்குள் அக்னியாய் சிவந்து இருப்பவனே
நீரும் உணவாக நிறைந்த உருவங்களே
பழையன கழியும் பரமேஸ்வர ஸ்வரூபமே

குழைந்து மங்கலம் கொடுக்கும் ஆண்டவனே
மங்கலம் உண்டாக்கும் மகத்துவ கடவுளே
மங்கலத்தை உடைய  மகிழ்வான தன்மையே
மங்கலத்தைக் காத்திடும் மாறாத உண்மையே
மங்கலம் அளிப்பதில் மாபெரும் தலைவனே (905)

97
Araudrah kundali cakri vikram yurjitasasanah
Sabdatigah sabdasahah sisirah sarvarikarah

புவியில் ரௌத்திரம் இல்லாத புருஷனே
செவிகளில் குண்டலம் சிறப்பாய் அணிந்தவனே
சக்கரம் உடைய சரித்திர நாயகனே
அக்ரமம் அழிக்கும் ஆற்றல் உடையவனே
சட்டங்களை  சீராய் சமமாய் இயக்குபவனே
பட்டங்கள் பெயர்களுக்கு அப்பாற் பட்டவனே
வேதங்கள் புகழும் வியக்தகு பிரம்மனே
குளிர்கால இனிமையாய் குறைகள் தீர்ப்பவனே
சிலிர்க்கும் இரவாய் சிந்தையில் கலந்தவனே (914)

98
Akrurah pesalo dakso daksinah ksaminam varah
Vidvattamo vitabhayah punyasrvanakirtanah

கடுமை இல்லாத கருணை வடிவமே
அடுக்கடுக்கான பெருமையில் அதிசய வடிவமே
திறமையில் சிறந்த திகம்பர ஈஸ்வரனே
அறமாய் உலகை ஆற்றலுடன் இயக்குபவனே
மன்னித்து மானுடத்தைக் காக்கும் பகவானே
எண்ணிலடங்கா வித்தைகளில் ஏற்றங்கள் பொருந்தியவனே
கேட்பதிலும் பாடுவதிலும் கிடைக்கும் புண்ணியமே (921)

99
Uttarano duskrtiha punyo duhsvapnanasanah
Viraha raksanah santo jivanah paryavasthitah

சம்சாரக் கடலைக்  கடக்க உதவுபவனே
கம்சன் போன்ற அரக்கரை அழிப்பவனே
புண்ணியத்தை அளிக்கும் பூரிப்பான கடவுளே

கண்காணும் கொடிய கனவுகளை அழிப்பவனே
கர்மவினை அழிக்க கைகொடுக்கும் தோணியே
தர்மத்தைக்  காக்கும் தலையான ஆண்டவனே
துறவிகளின் உள்ளத்து தூய ஆனந்தமே
பிறவிகளில் உயிராய் பெருமை தருபவனே
அண்டத்தில் ஊடுருவிய அதிசய உண்மையே

100
Anantarupo anantasrir jitamanyur bhayapahah
Caturasro gabhiratma vidiso vyadiso disah

எண்ணிலடங்கா உருவங்களில் ஏற்றமாய் இருப்பவனே
எண்ணிலடங்கா பலங்களை எழிலாய்க் கொண்டவனே
சினமென்னும் அரக்கனை  சிந்தையால் அடக்கியவனே
மனதின் அச்சங்களை அறவே அழித்தவனே
குறையின்றி  நியாயத்தைக் காக்கும் நீதிபதியே
நிறைவாய் நினைவுகளுக்குள்  அடங்காத நிஜமே
கர்மவினை அளிக்கும் களங்கமில்லா பகவானே
நிர்ணயம் செய்தபடி உலகைக்  காப்பவனே
நல்லதும் தீயதும் எதுவென்று உரைப்பவனே (940)

101

Anadirbhurbhuvo laksmih suviro rucirangadah
Janano janajanmadirbhimo bhimaparakramah

தொடக்கம் இல்லாத தொன்மை வாய்ந்தவனே
கிடக்கும் பூமியைக் கைத்தாங்கும் ஆதாரமே
சக்தியாய் லக்ஷ்மியாய் சாகஸம் செய்பவனே
புத்திக்கு எட்டாத புதுப்புது வழிகளே
பிறப்புக்கு காரணமாகி பிறக்க வைப்பவனே
பிறந்த உயிரினங்களின் பிறப்பின் காரணமே
அச்சத்தின் காரணமாகி ஆணிவேராய் இருப்பவனே
துச்சமாய் தகர்த்திடும் தூயதொரு வலிமையே (949)

102
Adharanilayo dhata pushpahasah prajagarah
Urdhvagah satpathacarah pranadah pranavah panah

அனைத்து பொருள்களுக்கும் ஆதாரமான ஈஸ்வரனே

அனைத்து பொருள்களையும் ஆதரித்து காப்பவனே
மொட்டாய் மலராய் மொத்தமாய் பூத்தவனே
எப்போதும் விழிப்பாய் எங்கும் வியாபித்தவனே
தலையான தலைவனாய் தரணியை ஆள்பவனே
குலையாது தருமவழியில் கூர்மையாய் நடப்பவனே
உயிரின் மூலமாய் உணர்வாய் இருப்பவனே
உயிரின் உண்மையாய் ஓங்கார மந்திரமே
தினப்படி நடவடிக்கை திவ்யமாய் நடத்துபவனே (958)

103
Pramanam prananilaya pranabhrt pranajivanah
Tattvam tattvavidekatma janmamrtyujaratigah

தன்னாலே அறியப்படும் தன்னறிவு உணர்வே
தன்னுள் உறையும் உயிரின் நிலையே
உயிரை இயக்க வைக்கும் உண்மையே
மெய்யாய் அமைந்த மேவிய தத்துவமே
மெய்யை உணர்ந்த மேன்மை பொருளே
ஒன்றாய் அமைந்த உண்மை ஆன்மாவே
என்றும் பிறப்பிறப்பு இல்லாத நிலையே (966)

104
Bhurbhuvassvastaru starah savita prapitamahah
Yajno yajnapatiryajva yajnango yajnavahanah

உலகங்கள் மூன்றிலும் ஊடுருவி இருப்பவனே
சுலபத்தில் சம்சாரக்கடலை கடக்க உதவுபவனே
தந்தையாய் இவ்வுலகை பிறக்கச் செய்பவனே
எந்தையாய் எல்லோருக்கும் மூத்த இறைவனே
யாகத்தின் உருவமாய் எங்கும் இருப்பவனே
யாகத்தின் அதிபதியாய் இவ்வுலகைக் காப்பவனே
யாகத்தைச் செய்யும் யோகமான வைதிகனே
யாகத்தைக் கரங்களாய் யௌவனமாய் கொண்டவனே
யாகத்தை நடத்த வைக்கும் காரணமே (975)

105
Yajnabhrd yajnakrd yajni yajnabhug yajnasadhanah
Yajnanatakrd yajnaguhyamanna mannada eva cha

யாகத்தைக் காக்கும் யௌவன புருஷனே
யாகத்தை உருவாக்கிய எழிலான ஈஸ்வரனே
யாகத்தின் குறிக்கோளாய் இயங்கும் மூலமே
யாகத்தை இரசிக்கும் இனிய நாயகனே
யாகத்தால் அடையக் கூடிய அன்பனே
யாகத்தின் பயனை எல்லோருக்கும் தருபவனே
யாகத்தின் இரகசியமான உண்மை பிரம்மமே
அன்னமாய் இவ்வுலகில் அருளும் இயற்கையே
அன்னத்தை உண்ணும் உண்மை ஆண்டவனே (984)

106
Atmayonih svayanjatah vaikhanah samagayanah
Devakinandanah srasta ksitisah papanasanah

தனக்குத் தானே தாயாய் ஆனவனே
தனக்குத் தானே தனயனாய் ஜனித்தவனே
ஆழமாய் தோண்ட அளவில்லா ஆளுமையே
ஆழமான உண்மையாய் அருமை வேதமே
தேவகி மைந்தனாய் திருவருள் புரிந்தவனே
தேவனாய் இவ்வுலகை திவ்யமாய் உருவாக்குபவனே
அரசனாய் இவ்வுலகை ஆளும் தலைவனே
வரமாய் பாபங்களை வையத்தில் அழிப்பவனே (992)

107
Sankhabrn nandaki cakri sarngadhanva gadadharah
Rathangapanir raksobhyah sarvapraharanayudhah
Sarvapraharanayudha om nama iti

சங்காய் முழங்கி அதருமத்தை ஒழிப்பவனே
மங்கலமாய் பற்றறுக்க மகத்தான ஞானமே
சக்கரத்தை ஏந்திய சத்திய பகவானே
அக்கரை சேர்க்க ஆழ்மனதின் ஆயுதமே
புத்தியாய் வழிநடத்தும் பூவுலகின் கதையே
உத்தியாய் இரதத்தை உள்ளழுத்திய சாரதியே
சரணம் அடைந்தவரை சத்தியமாய் காப்பவனே
கரங்கள் ஆயுதமாக காக்கும் ஈ ஸ்வரனே
ஓம் கரங்கள்ஆயுதமாக காக்கும் ஈஸ்வரனே! (1000)

108
Vanamali gadi sarngi sankhi cakri ca nandaki
Sriman narayano vishnuvaasudevo abhiraksatu
Vaasudevo abhiraksatu om nama iti

வனமாலை தரித்தபடி வாசுதேவன் அமர்ந்திருக்க
தனம் பொருந்திய தாயாரும் உடனிருக்க
கனமான சக்கரம் சங்கும் கதையுடன்
இனத்தைக் காக்கும் வில்லாய் சார்ங்கமும்
மனம் புத்தி அகங்காரத்தின் உண்மையாய்
குணமில்லா குறையில்லா கோவிந்த நாராயணனே
தினந்தோறும் நம்மை திவ்யமாய் காப்பானே
தினந்தோறும் நம்மை தெய்வமாய் காப்பானே

வேறு
வரங்களைத் தந்த வனமாலி நாராயணனே
வரத்திருமகள் வாயினில் வார்த்தைகளாய் வந்தாயே
ஆயிரம் நாமங்களால் அர்ச்சிக்கப்பட்ட ஈஸ்வரனே
வாயினால் பாடியே மனதால் வாழ்த்தினேனே
தாயினைப் போலவே தயாள அருளே
சேயினை அரவணைக்க சிந்தையில் அமர்வாயே
பாமாலை நான் பாடியது உன்னருளாலே
பூமாலை எனநீ புவியில் சூடுவாயே

ஓம் நமோ நாராயணா !